# வடு

## சாதிய ‘வடு’ அகற்றிடத் துணிந்த நெடும் பயணம் இது.

இதழ்-16 ஒக்டோபர்-2011



அண்ணன் சீமான் அவர்களுக்கு அன்பான வேண்டுகோள்


பக் – 10 – 11

என். கே. ரகுநாதன் அவர்களுடன் உரையாடல்



பக் – 6

**ஆனையிறவுக்கு அங்காலை எல்லாரும் ஒண்டுதானா? இல்லை.** பக் – 5




அன்னதானத்திற்கு ஏங்கிய சிறுவனை விரட்டிய கோயில் நிர்வாகம்.

பக் – 4

பரமக்குடியில் 1957 இல் இருந்து உறங்கிக்கிடந்த “நீறு” நெருப்பானது.

பக் – 13 – 14






அறம்தான் ஆயுதங்களில் கூர்மையானது,
ஆனால் அது நேர்மையானது
அவசரப்பட்டோ, ஆத்திரப்பட்டோ,
அது யாரையும் தாக்காது.
தாக்க ஆரம்பித்தால் தோக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆதரவுமிக்க ‘வடு’ வாசகர்களுக்கு...

நீண்டகாலத்திற்கு பின்பு மீண்டும் ‘வடு’ தன்மீது படிந்துள்ள ‘சாம்பலை’ உதறி உயிர்த்தெழுகின்றது. தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் உள்ள எமது ‘வடு’ வாசகர்களின் தொடர்ச்சியான வேண்டுதல்களும், ஆதரவும் அதற்கும் மேலாக ‘வடு’ பத்திரிகை தொடர்ச்சியாக வெளிவருவதற்குரிய பொருளாதார உதவி வழங்கிட முன்வந்துள்ள ‘இலங்கைத் தலித் சமூகமேம்பாட்டு முன்னணியின்’ புகலிடத்து ஆதரவாளர்களின் பெரும் பங்களிப்பின் நிமித்தமாகவே மீண்டும் ‘வடு’ உயிர்தெழுந்துள்ளது என்பதை நாம் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

இலங்கையில் நீண்டகாலமாக நிலைபெற்றிருந்த ஆயுத-கொலை-கலாச்சாரமும், பேச்சுச்சுதந்திரமும் மறுக்கப்பட்டதுமான ஜனநாயகச் சூழல் அல்லாத நிலையிலிருந்து, இன்றைய சூழலானது ஒப்பீட்டளவில் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்றே நாம் கருதுகின்றோம்.

புலிகள் அழிக்கப்பட்டதன் ஊடாக தமிழ் மக்களின் வாழ்வில் பல்வேறு மாற்றங்களையும், தமிழ் அரசியல்கட்சிகளின் சுதந்திரமான நடவடிக்கைகளையும் நாம் அவதானித்து வருகின்றோம். அதே நேரம் சாமானிய மக்களின் மனங்களை வெல்வதற்கு இடையூறாக புலிகளை வெற்றிகொண்ட அரசின் தொடர்ச்சியான நடவடிக்கைகள் அமைந்துவருகின்றது. தமிழ்பேசும் மக்களுக்கிடையில் ஏற்படவேண்டிய பல்வேறு வகையான சிந்தனை மாற்றங்களுக்கு இடையூறாக இருந்த மிகப் பிற்போக்கான ஒரு சக்தி புலிகள் என்பதை பலர் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான பிற்போக்கு சக்தியை நிராகரித்து, நிர்மூலமாக்க வேண்டிய பணியை தமிழ்பேசும் மக்களாகிய நாமே செய்திருக்கவேண்டும்..! அது நடைபெறவில்லை.

புலிகள் அழிக்கப்பட்டதானது தமிழ்பேசும் மக்களின் மேம்பாட்டிற்கு உகந்ததாக நாம் கருதுகின்ற அதே வேளையில், தமிழ்பேசும் மக்களின் நலன்களையும் நோக்கமாக கொண்டுதான் புலிகளை இந்த அரசு வெற்றி கொண்டுள்ளதா என்கின்ற சந்தேகங்கள் நாளுக்கு நாள் வலுவடைந்தே வருகின்றது. பல்வேறு சிங்கள இனவாதக் கட்சிகளின் கூட்டாகவும், புலிகளை நேரடியாக வெற்றி கொண்ட இராணுவத் தலைமைகளின் எதேச்சை அதிகாரங்களுக்கும், ரௌடிக் குண்டர்களாகவும் அமைச்சர்கள் மாறிவரும் அதேநேரம், சொந்த பந்தங்களின் பாசப் பிணைப்பிலும் சிக்குண்டு சிதைந்து கொண்டிருக்கின்றது இன்றைய இலங்கை அரசு.

பல்வேறு பிரச்சனைகள் குறித்த விமர்சனங்களுக்கு மத்தியில் இறுதியான கிறீஸ் பூத நடமாட்டமானது. இரணுவத்தின் திட்டமிட்ட நடவடிக்கை என்பது அம்பலமானது. இந்தச்சம்பவம் குறித்த உண்மை நிலையை அரசாங்கம் ஏனோ மூடிமறைக்கின்றது. இதில் நம்பவர்களும் கிறீஸ் பூதத்தை சாட்டி பல்வேறு அடாவடித்தனங்களை செய்ததாகவும் செய்திகள் வந்துள்ளன.

புலிகளின் இராட்சியம் இருந்த காலகட்டத்தில் மாற்றுக் கருத்தியலாளர்கள் எனும் அடையாளமும் மாற்று அரசியல் எனும் மொழியும் உலாவி வந்தது. புலிகள் இல்லாத இன்றைய சூழலில் மாற்றுக் கருத்தியலும், மாற்று அரசியலும் எங்கே தொலைந்து போனது? பேசப்பட்ட அல்லது நாம் விரும்பிய மாற்று அரசியல் என்பதன் அர்த்தம் என்ன? இலங்கை சுதந்திரம் அடைந்த பிற்பாடான தமிழ் அரசில் தலைமைகள் தமிழ்பேசும் மக்களின் நலன்களுக்கானதாக பேசிவந்த அரசியலுக்கும், இன்றுவரை பேசப்பட்டுவரும் அரசியல் கருத்தியலிலும் எம்மால் எந்த வேறுபாட்டையும் காணமுடியால் இருக்கின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் மாற்று அரசியலை முன்னெடுப்பதற்கான சிந்தனை தோன்றவேண்டும். எதிர்காலங்களில் இலங்கையில் வாழும் அனைத்து சமூகங்களுக்கும் நம்பிக்கையுடையவர்களாகவும், நட்போடும் நேசத்தேடும் உறவுகளை பேணவேண்டும் எனக்கருதுவோமாயின் இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய ஓர் அரசியல் சிந்தனையை நாம் உருவாக்க வேண்டும். குறிப்பாக சிங்கள முற்போக்கு அரசியல் சக்திகளை இனம் கண்டு அவர்களுடன் இணைந்த ஓர் அரசியல் கலாச்சாரத்தை நாம் உருவாக்க வேண்டும்.

சிங்கள மக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சனைகள் என்ன? முஸ்லிம் மக்களுக்கு உள்ள பிரச்சனைகள் என்ன? இலங்கையில் பலநூறு ஆண்டுகளாக வாழ்ந்து வருபவர்களை தொடர்ந்தும் ஏன் இந்திய வம்சாவளியினர் என அடையாளப்படுத்தி வருகின்றோம்? என எமது அரசியல் சமூகப் பார்வைகள் விரிவடையவேண்டும்.

புலிகள் அழிந்த பிற்பாடும் சிங்கள் மக்கள் மத்தியில் தமிழ் பேசும் அரசியலானது நம்பிக்கைக் குரியவகையில் தம்மை அடையாளம் காட்ட மறுக்கின்றது. இவ்வாறான சூழலானது இன்றைய அரசின் இருப்பையும், அதன் தான் தோன்றித்தனமான நடவடிக்கைகள் நீடிப்பதற்குமே வழிவகுக்கும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எமது சாணக்கியங்களான தமிழ்தேசியம் ஆண்டபரம்பரை என்றெல்லாம் தொடர்ந்தும் நாம் பேசிவருவோமாயின் இன்றைய அரசின் நடவடிக்கையில் எந்த மாற்றத்தையும் நாம் கண்டுகொள்ள முடியாது. ஆண்டபரம்பரைபேசி அரசை மிரட்ட எங்களிடம் இப்போ நீர்மூழிக் கப்பலும் இல்லை, விமானமும் இல்லை, வெடித்துச் சிதற மனிதக் குண்டும் இல்லை. வெறும் வெள்ளை வேட்டியோடதான் நாம் நிற்கின்றோம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

**இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் சார்ந்த அரசியல் கட்சிகளுக்கு ‘இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினதும்’ ‘அனைத் திலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையினதும்’ பணிவான வேண்டுகோள்.**

இலங்கையில் தமிழ் அரசியல் முன்னெடுப்பில் பல்வேறு மாற்றங்கள் நிகழவேண்டும் என நாம் கருதுவதோடு பிரதானமாக எம்மத்தியில் பல்வேறு சமூக இயக்கங்கள் இல்லாததும் மிகப்பெரிய குறைபாடாகும். தலித்சமூகம் சார்ந்து செயல்படும் நாங்களும் ஒரு சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கமாகவே செயல்பட விரும்புகின்றோம்.

எமது பண்பாட்டுக் கலாச்சாரத்தின் மீதான கேள்விகளை எழுப்புவதோடு, அதனது மாற்றங்களுக்கான வழிவகைகளையும் நாம் கண்டடைய வேண்டியவர்களாக உள்ளோம். எமது சமூகத்திற்கு மறுக்கப்பட்ட அரசியல் பொருளாதார உரிமைகளை நாம் போராடிப் பெற்றுவிடலாம். சாதிய அடையாளத்தையும், சாதிய சமூக மனநிலையையும் மாற்றுவதற்கான வழிகளை காண்பதுதான் எமக்கு சாவாலான பிரச்சனையாக உள்ளது. எனவேதான் நாம் ஒரு சமூக இயக்கமாக செயல்படுவதன் மூலமே இது சாத்தியமாகும் என நம்புகின்றோம்.

நாம் அரசியல் கட்சிகளுக்கு எதிரானவர்கள் அல்ல. அரசியல் கட்சிகளின் ஆதரவை வேண்டி நிற்பவர்கள் நாம். பெண்களுக்கான அமைப்புகள் செயல்படுவது போல், தொழிலாளர்களுக்கான தொழிற் சங்கங்கள் செயல்படுவதுபோல் தலித் சமூகம் சார்ந்த அமைப்புகளும் செயல்படுவதற்கு நீங்கள் ஊக்கமளிக்க வேண்டும். அதுமட்டுமல்லாது அவை செயல்படுவதற்கான பல்வேறு உதவிகளையும் அரசாங்கமும், அரசியல் கட்சிகளும் செய்வதற்கு முன்வரவேண்டும். அரசியல் கட்சிகளாலும், அரசாங்கத்தினாலும் சமூகத்தில் நிலவும் அனைத்துப் பிரச்சனைகளையும் தீரப்பதற்கான வல்லமை இருப்பதில்லை.

பல்வேறு சமூக இயக்கங்கள் சுயாதீனமாக செயல்படுவதோடு அவைகளுக்கான பல்வேறு உதவிகளையும், மானியங்களையும் வழங்கிவருவதன் ஊடாகவே வளர்முக நாடுகளின் சமூக கலாச்சாரங்களில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றது. அதற்காக வளர்முக நாட்டு சமூகங்கள் யாவும் புனிதமான ஓர் சமூகங்கள் எனும் கற்பனைக்கும் நாம் சென்றுவிடவில்லை. ஒப்பீட்டளவில் தான் நாம் எதையும் அவதானித்து நகர வேண்டியுள்ளது. எனவேதான் தமிழ் அரசியல் கட்சிகளான நீங்கள் எமது சமூக விடுதலை செயல் பாட்டிற்கு ஆதரவாகவும், உதவியாகவும் இருக்கவேண்டுமென மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

***வடு வாசகர்களுக்கு.....***

***இந்த "வடு" பத்திரிகைக்கான கதை, கவிதை, கட்டுரை மற்றும் தகவல்கள் போன்ற ஆக்கங்களையும் விமர்சனங் களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.*** தொடர்புகட்கு:

புலம்பெயர் நாடுகளுக்கு:-

**"VADU"**
**F.D.S.D.S**
**70, SQUARE DES BAUVES**
**95140 GARGES LES GONESSE**
**France**
**(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)**

இலங்கைக்கு:-

'VADU'
N.Thamil Alagan
'Malar Vasa',
North, Urumpirai.
Urumpirai

***eamil: vadusrilanka@gmail.com***

**எமது தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் இணையத்தள முகவரி**

Thuuu.net

காண்பதிலுள்ள காணாததைக் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானத்திற்கு ஏங்கிய சிறுவனை விரட்டிய கோயில் நிர்வாகம்.

இன்றும் ஆலயங்களில் தொடர்ந்தும் சாதியப்பாகுபாடுகள் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன. சில கேயில்களுக்குள் தலித் சமூகத்தவர்கள் அனுமதிக்கப்பட்டாலும் கூட, அன்னதான நடவடிக்கையின்போது அனைவரும் சமமாக அமர்ந்து உணவு உண்பதற்கு இப்போதும் தடைகள் (தீண்டாமை) இருந்து வருகின்றன.

வறியவர்கள், அனாதைகள் போன்றவர்களுக்கு உணவு வழங்க வேண்டிய ஆலய அன்னதான மடங்கள், ஆலய நிர்வாகத்தினர்களின் குடும்பங்களுக்கும், ஆலயத்தின் கட்டிட வளர்ச்சிக்கு நிதியை வாரி வழங்கும் பசியறியா பணக்காரர்களுக்கும், பகட்டாக உடை, ஆபரணங்கள் அணிந்துவரும் பக்தர்களுக்கு மட்டுமே அன்னதானம் வழங்குவதில் முன்னுரிமை அழிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையிலே மிகவும் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணத்திலுள்ள அம்மன் திருத்தலத்தில் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் மதியம் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. அன்றையதினம் பூசை செய்யும் உபயகாறர்களுக்கென பிரத்தியேகமாக



அன்னதான உணவை எடுத்துவைத்தபிற்பாடு மிகுதியானவற்றையே பிறருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

குறித்த ஒரு செவ்வாய்க்கிழமை பூசை முடிந்து அன்னதானம் வழங்கும் போது சக பக்தர்களுடன் கிழிந்த,அழுக்கான ஆடையணிந்த ஆறு வயது மதிக்கத்தக்க ஒரு ஏழைச் சிறுவனும் அன்னதான உண்பதற்காக எல்லோருடனும் அமர்ந்தான். அவன் சாப்பிடுவதற்கு இலையும் போடப்பட்டது. அந்தக்காட்சியைக்கண்ணுற்ற கோயில் நிர்வாகத்தின் மேலதிகாரி அங்கு தனதருகில் நின்ற ஒருவர் மூலமாக அன்னதான உணவை உண்பதற்கு தயாராக இருந்த அந்த ஏழைச் சிறுவனை எழுப்பி விரட்டிவிட்டனர். கண்ணீர் சிந்தியபடியும், நாவில் எச்சில் ஊற "எனக்கு சரியா பசிக்குதுங்க" என அழுதவாறு ஏங்கி நிற்கும் அச்சிறுவனை எவருமே கண்டுகொள்ளவில்லை. கல் நெஞசம் படைத்த கோயில் நிர்வாகத்தினர் அச்சிறுவனைப் பார்த்து "மற்றவர்கள் சாப்பிடேக்கே வரக்கூடாதென்றும் எல்லோரும் சாப்பிட்டுப்போன பிற்பாடு உனக்குத் தருவம் என்று எந்தன தடவ சொல்லுறது" என அச்சிறுவனை மிரட்டினார்கள். பசியின் கொடுமையைத் தாங்க முடியாத அந்தச் சிறுவன் கண்ணிலிருந்த வடிந்த கண்ணீரையும், நாவில் ஊறிய எச்சிலையும் முண்டி விழுங்கியபடி ஒரு மூலையில் சென்று அமர்ந்தான்.

குழந்தையும் தெய்வமும் ஒன்றென கோயில்களுக்கு கோயில் மேடை போட்டு சொற்பொழிவுகளுக்கு மட்டும் குறையில்லை. ஆனால் கோயிலுக்க இருக்கும் தெய்வமும் கல்லு... அதை வணங்கும் 'மனங்களும்' கல்லாக அல்லவா இருக்கின்றது.

(இச்சம்பவம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திலே இடம்பெற்றது. இப்பொழுதும் இந்நிலையே தொடர்கின்றது.) ✎

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத் தீர்த்தத் திருவிழாவின் போது இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார். ஆச்சிரமம் வீதி இணுவில் கிழக்கைச் சேர்ந்த இராசமனோகரன் மகீதன் (வயது 23) என்ற தலித் இளைஞனே உயிரிழந்தவர் ஆவார். இவர் காலை 6.30 மணியளவில் நண்பர்களுடன் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த போதே சுழியில் அகப்பட்டு மரணமானார். கடற்படையினரால் தடை உத்தரவு விதிக்கப்பட்ட பகுதியில் சென்று நீராடியதனாலே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வடமாகாணக் கடைப்படைத் தளபதி றியல் அட்மிரல் ரவீந்திர விஜய குணவத்தனவின் கட்டளைக்கிணங்க ஆற்றில் தேடுதல் நடத்திய கடற்படையினரால் சடலம் மீட்கப்பட்டது.

இப்படியான சம்பவங்கள் மக்களின் அறியாமையாலும் கவனக்குறைவினாலுமே ஏற்படுகின்றன. இவ்வாறான சம்பவங்களில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் தலித்துக்களே.



இராசமனோகரன் மகீதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவுக்கு அங்காலை எல்லாரும் ஒண்டுதானா? இல்லை.

- ஆதவன் தீட்சண்யா - அவர்களின் கட்டுரையின் சிறுபகுதி

சாதியமைப்பை மையப்படுத்திய எந்தவொரு உரையாடலும் இந்தியாவோடு மட்டுமே முற்றுப்பெற்றுவிடக்கூடியதல்ல. அது இந்து மதத்தின் செல்வாக்கு மண்டலத்திற்குள் மாட்டிக்கொண்டுள்ள நேபாளம், பர்மா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கையோடும் தொடர்புடையதாக இருக்கிறது. இந்த நாடுகளில் நிலவும் சாதிகளின் பெயர்களில் வேறுபாடு தெரியலாமேயன்றி சாதியத்தின் அடிப்படைப் பண்புகளில் எதுவிதமான மாற்றங்களுமில்லை என்பதை உறுதிபடச் சொல்லிவிடமுடியும். ஆனாலும் இந்தியச் சாதியமைப்புக்கும் இலங்கைச் சாதியமைப்புக்கும் பாரிய வேறுபாடுகள் இருப்பதாக எப்போதுமே சொல்லப்பட்டு வருகிறது. இதுபோலவே கடந்த 30ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த போர்ச்சூழல் இலங்கைத் தமிழரிடையே சாதியை ஒழித்துவிட்ட தாகவும் விதந்துரைக்கப்படுகிறது.

இலங்கையின் சாதிப்படிநிலையில் பார்ப்பனர்கள் மேலாதிக்கம் பெறவில்லை என்றும், ஆகவே இலங்கைச் சாதியமைப்பு இந்தியச் சாதியமைப்பிலிருந்து வேறுபட்டது என்ற முன்வைப்பும் உள்ளீடற்றது என்பதை அறிய பென்னம்பெரிய ஆய்வுகள் எதுவும் தேவைப்படுவதில்லை. நாங்கள் யாருக்கும் தாழ்ந்தவர்களல்ல அல்லது பார்ப்பனர்களும்கூட எங்களுக்கு கீழானவர்கள்தான் என்ற கற்பிதத்திலிருந்து இப்படியான புனைவுகள் உருவாவது இயல்பானது தான். ஒரேயொரு ஒற்றை பார்ப்பனரும் இல்லாதவையே இந்தியாவின் அனேக கிராமங்கள். ஆனால் அவை சாதியத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் பார்ப்பனீய அடிமை வளையத்திற்குள் பணிந்து கிடக்கின்றன. இந்த இந்திய கிராமங்களின் தன்மையிலிருந்து மாறுபட்டதாக யாழ்ப்பாணச் சமூகத்திடம் என்ன இருக்கிறது? சாதியம் தன்னைப் பாதுகாப்பதற்கான காவலர்களை தானே உருவாக்கிக் கொள்கிறது. அது பார்ப்பனர்களுக்காக காத்திருப்பதில்லை.

யாழ்ப்பாணத்துக்கு தமிழக மன்னர்கள் வழியாகவே பார்ப்பனர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். அபூர்வ மருத்துவ குணம் கொண்ட கீரிமலையின் சிற்றாற்றுத் தீர்த்தத்தில் நீராடி தனது பிணியைப் போக்கிக் கொள்ள மாருதப் பிரவாகவல்லி என்கிற சோழமகள் வந்திருக்கிறாள். “அவள் அமைப்பித்த சுப்பிரமணியாலய பூசைக்கும் அருச்சகர்களுக்கும் கந்தரோடையென வழங்கும் இடத்தைச் சமர்ப்பித்துத் திருத்தி நெல்விளைநிலமாக்கி அவர்களுக்குப் பிரமதாயமாகக் கொடுத்தாள்..'' என்கிறது ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச்சரித்திரம். கி.மு101 ல் நல்லூரையடைந்த ராசகுமாரன் ஒருவன் “தனது புரோகிதரான கங்காதர ஐயருக்கும் அவரது பன்னியார் அன்னபூரணியாருக்கும் ஏனைய அந்தணர் களுக்கும் அக்கிரஹாரங்களும் அமைத்தான்” என்றும் சொல்கிறது இந்நூல். காலத்துல்லியம் போன்றவை முன்பின் மாறிப்போயினும், தமிழகத்தில் பிரமதாயம்.'. ஆரியவர்த்தம்.'. அக்ரஹாரம்.'. சதுர்வேதிமங்கலம் போன்ற வற்றுக்கு இருந்த சமூக அங்கீகாரமும், மத அதிகாரமும், உழைப்பைச் சுரண்டுவதற்கும் சமூகத்தைப் பிளவுபடுத்துவதற்கும் பார்ப்பனரால் பயன் படுத்தப்பட்டதை அறிவோமானால் அவர்கள் யாழ்ப்பாணத்திலும் உயர் நிலையிலேயே இருந்திருந்து, தமிழக மன்னர்களின் நேரடி ஆட்சிகள் முடிவுக்கு வந்த நிலையில் அதிகாரமிழந்திருக்கக் கூடும். இதன்பொருள், பார்ப்பனக் கருத்தியல் தன் செல்வாக்கை இழந்துவிட்டது என்பதல்ல. இன்மையின் வழியாகவும் இருப்பை உணர்த்துவதே பார்ப்பனீயத்தின் வெற்றி. அதற்கு பார்ப்பனர்களின் நேரடி மேற்பார்வை தேவைப்படுவதில்லை.

பார்ப்பனீயச் செல்வாக்கிலிருந்து விடுபட நடைபெற்ற எத்தனிப்புகள் எல்லாவற்றையும் இந்துமதத்தில் ஏற்பட்ட சீர்திருத்தங்களாகக் காட்டுவதும், எதிர்ப்புகளை சமாளித்து தக்கவைத்துக்கொள்ளும் நெருக்கடி யில் வேண்டாவெறுப்புடன் மேற்கொண்ட சில சீர்த்திருத்தங்களை பார்ப்பனீய செல்வாக்கிலிருந்து விடுபடும் எத்தனிப்பாகவும் மாற்றிப் போட்டு குழப்பிக்கொள்ளும் போக்கு நெடுங்காலமாக நிலவுகிறது. ஆனால் இந்துமதம் எவ்வளவுதான் சீர்திருத்தம் செய்துகொண்டதாக அறிவித்துக் கொண்ட போதும் அது சாதியமாகவே செயல்படும் என்பதற்கு சாட்சியங்கள் தேவைவில்லை. இலங்கையின் இந்து மதத்தவரான வடக்கு கிழக்கு தமிழர்களிடமும் மலையகத் தமிழர்களிடமும் நிலவும் சாதிப் பிரிவினை அதை உறுதி செய்கிறது. இந்துமதம் ஒட்டுமொத்தச் சூழலையும் மாசுபடுத்திவிடுகிறது, இந்து மதத்தால் குறுக்கீடு செய்யப் பட்ட மனம் எங்குபோனாலும் இந்துமனமாகவே இயங்குகிறது என்பார் அம்பேத்கர். பௌத்தம் தழுவியோரென அலட்டிக்கொள்ளும் சிங்களவரிடையேயும் தமிழ் பேசும் இலங்கை கிறிஸ் தவர்களிடையேயும் புலம்பெயர்ந்த தமிழரிடையேயும் சாதியம் உயிர்ப்புடன் இயங்கி தீண்டாமையை வெளிப்படுத்துவதிலிருந்து இதை அறியலாம்.

‘ஆனையிறவுக்கு அங்காலை எல்லாரும் ஒண்டுதான்’ என்ற தொடர் வழக்கத்திலிருப்பதை வைத்துக்கொண்டு சாதியப் பாகுபாட்டை யாழ்ப்பாணத்து எல்லையோடு சுருக்கிப் பார்க்கும் ஒரு போக்கு ஆய்வாளர்களிடமும்கூட காணப்படுகிறது. இந்தத் தொடர்கூட யாழ்ப்பாணத்தில் சாதி இருக்கிறதென அறிவிக்கிறது. அடுத்து ஆனையிறவைத் தாண்டிவிட்டால் தமிழர்கள் பாரபட்சமின்றி இணைந்து வாழ்வதாகக் கூறுவதிலும் உண்மையில்லை. கடலும் கண்டமும் கடந்து போயும் சாதியத்தை இந்துமதத்தை காப்பாற்றுகிறவர்களாகவே யாழ்ப்பாணத்தவர் இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணம்தான் புலம்பெயர் நாடுகளில் அவர்கள் நிறுவிக் கொண்ட கோயில்கள்.

**(கீழ்காணும் இணையத்தில் ஆதவன் தீட்சண்யா அவர்களின் முழுமையான கட்டுரையை படிக்கலாம்)**

**http://aadhavanvisai.blogspot.com/2011/09/blog-post_28.html?spref=fb**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்போது கனடாவில் வசித்துவரும்**

# என். கே. ரகுநாதன்

**அவர்களுடன் உரையாடிய**

**-கற்சுறாவின்-**

**அனுபவங்கள்.**



ஈழத்தின் சாதிய விடுதலைப் போராட்டங்களில் மிக முக்கிய பாங்காற்றிய என்.கே.ரகுநாதன் அவர்கள் தனது எழுத்து மூலம் மிகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தவர். சிறுகதை எழுத்தாளனாக தன்னை முன்நிறுத்திய அவர் "கந்தன் கருணை" என்ற நாடகத்தை யாழ் சாதிவெறிக்கு எதிரான தனது விமர்சனமாக முன்வைத்தவர். 1969இல் எழுதிய இந்த நாடகம் ஆலயநுழைவுப் போராட்டங்கள் நடைபெற்ற காலத்தில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் இடம்பெற்ற சாதிவெறியர்களது ஆலயமறிப்பு சம்பவங்கள் குறித்து கேலி செய்தது. "நிலவிலே பேசுவோம்" என்ற சிறுகதை யாழ் சாதியத்தை அப்பட்டமாகத் தோலுரித்த சிறுகதை. 80வயதுகளைக் கடந்து கனடாவில் வாழ்ந்து வரும் என். கே ரகுநாதன் அவர்களை இரண்டுவருடங்களுக்கு முன் சந்தித்து உரையாடிய விடையங்களை இங்கு பதிவு செய்ய இருக்கிறேன். யாழ்ப்பாணத்தை விட்டு மலையகத்திற்கு கல்வி கற்பிக்கப் போன என்னை அங்கு இரண்டு நாளில் என்ன சாதி என்று கண்டுபிடித்துவிட்டார்கள். கனடாவில் இரண்டு மாதம் எடுத்தது அவ்வளவுதான். இப்போது சாதி ஒழிந்து விட்டது என்று சொல்கிறார்கள் தம்பி அப்படியில்லை துப்பாக்கி நிழலில் சாதிகள் மறைந்து கிடக்கின்றன என்றார். நீங்கள் இப்போது எதுவும் எழுதுவதில்லையா எனக் கேட்டபோது, மற்றவர்கள் போல் எனக்கு எழுதமுடியாத நிலை வரவில்லை. கை நடுக்கமில்லை. நன்றாகத் தைரியம் இருக்கிறது. ஆனால் எழுதுவதற்கான சூழல் எனக்கு இங்கில்லை. அப்போது சுற்றிவர நண்பர்கள் வாக்குவாதங்கள் என்று நிறைய இருந்தது. இப்போது அது இல்லை. நான் படிப்பித்த பள்ளிக்கூடங்களில் பட்ட கஸ்டங்கள் எல்லாவற்றிற்கும் கடைசியில் சென்றல் கொலிஜில் மிகப்பெரிய நிம்மதி கிடைத்தது. எனது ஆசிரியர் தொழிலின் இறுதிக் காலங்களில் அங்கு மிகவும் சந்தோசமாக இருந்தேன். எனது நேர்மைக்கான மதிப்பு எனக்கு அங்குதான் கிடைத்தது. எனக்கு கிளித்தட்டை விட எதுவும் விளையாடத்தெரியாது ஆனால் எனது உழைப்பையும் நேர்மையையும் பார்த்து விளையாட்டுத்துறை ஆசிரியராக நியமித்தார்கள். அங்கு பெற்ற சந்தோசத்தை நான் எங்கும் பெறவில்லை. மற்றய பள்ளிக்கூடங்கள் அநேகமாக எனது சாதியைக் கண்டுபிடிபதிலேயே அதிக கவனம் செலுத்தின.

(தொடரும்...)

## உதவி வழங்குவதில் சாதியப் பாகுபாடு

யாழ் குடா நாட்டில் அனைத்து வீடுகளும் கல்வீடுகளாக மாறி வருகின்ற நிலையில் ஊரியில் இன்னமும் 25 வீடுகள் குடிசை வீடுகளாகவே உள்ளது.

சொந்தக் காணி இருந்தும் வீடு கட்டுவதற்கான அரசின் உதவிகள் கிடைக்காமையாலேயே இவைகள் இன்னமும் குடிசை வீடுகளாகவே உள்ளன.

வேளாள வர்த்தகர்கள் பலருக்கும் உதவி கிடைத்துள்ள போதும் இவர்களுக்கு மட்டும் ஏன் இதுவரை உதவி கிடைக்கவில்லை? கிராமசேவகரின் சாதிய ரீதியான பாகுபாடே இதற்குக் காரணம். சாதிய பாகுபாடு காரணமாக மறுக்கப்பட்ட உதவிகள் எமக்கு கிடைக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

## அண்ணமார் வீதி புனரமைப்பு

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் காரை ஊரிப் பிரதேசத்தின் 1500 மீற்றர் நீளமான பாலமுருகன் அண்ணமார் கோயில் வீதியும் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்காக ரூபா.1.25 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக ரூபா.3 இலட்சம் பெறுமதியான மனிதக் கூலி பிரதேச மக்களிடம் இருந்தும் பெறப்படவுள்ளது.

வீட்டில் ஒருவர் என்ற அடிப்படையில் தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை அவர்கள் வேலை செய்ய வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

வீதிப் புனரமைப்புக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் வந்துள்ள நிலையில் இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு பாடசாலைகளிற்குச் செல்ல அனுமதி மறுக்கும் அதிபர்கள்.

யாழ்ப்பாணக் கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் யாழ் நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான அனுமதியை வழங்க மறுக்கின்றார்கள் கிராமப் பாடசாலை அதிபர்கள்.

குறிப்பாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஒரு சில புள்ளிகளால் சித்தி அடையாமல் போன மாணவர்கள், யாழ் நகர்ப் பாடசாலைகளில் அனுமதி கிடைத்த போதும் படித்துக் கொண்டிருக்கும் பாடசாலை அதிபர் இடைவிலகுவதற்கான அனுமதியை வழங்க மறுத்து வருகிறார்.

கடந்த வருடம் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இரண்டு புள்ளிகளால் சித்திபெற முடியாமல் போன அதே கிராமத்தைச் சேர்ந்த தலித் மாணவன் பாடசலை மாறுவதற்கான இடைவிலகல் அனுமதி கேட்டபோது அது மறுக்கப்பட்டுள்ள, அதே நேரம் 5,6 புள்ளிகளினால் சித்தி அடைய முடியாமல்ப் போன ஐந்து மாணவர்களுக்கு பாடசாலை மாறுவதற்கான அனுமதி வழங்கப் பட்டுள்ளது. குறிப்பிட்ட ஐந்து மாணவர்களும் இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியரின் உறவினர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட மாணவனின் ஏனைய சகோதரர்கள் இப் பாடசாலையில் கல்வி கற்பதனால் அவர்களது கல்வியில் ஏதாவது பாதிப்புக்கள் ஏற்பட்டு விடுமோ என நினைத்த பெற்றோர் இச் சம்பவத்தை எதிராக நடவடிக்கையெடுக்க தயங்குகிறார்கள்.

இருப்பினும் அப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் அனேகமானோர் அப்பிரதேசத்தைச் சேர்ந்த உயர் சாதியினரே. அவர்களது பிள்ளைகள் மட்டும் நகர்புறப் பாடசாலைகளில் கல்வி பயில இடைவிலகும் போது இவர்களுக்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுவது ஏன்?

அது மட்டுமன்றி குறிப்பிட்ட பாடசாலையின் கல்விசாராத அங்கமான விளையாட்டுப் போட்டிகளில் தாழ்ந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் இணைத்துக் கொள்ளப் படுகிறார்கள். இதன் பின்னணி என்ன என்பதை விளங்கிக் கொண்டாலும் அதிலிருந்து விடுபட முடியாத நிலையே காணப்படுகிறது.

ஒரு ஆசிரியர் 5 வருடங்கள் மட்டுமே தொடர்ந்து ஒரே பாடசாலையில் கல்வி புகட்டலாம் என்ற நிலை இருந்த போதும் குறிப்பிட்ட பாடசாலை ஆசிரியர்களில் அனேகமானோர் பல வருடங்களாகியும் மாற்றப் படாமலேயே இருக்கிறார்கள். பாடசாலையில் அந்தப் பிரதேசத்து ஆசிரியர்கள் மாற்றப்படும் பட்சத்திலே இவ்வாறான சம்பவங்கள் நடக்காதென பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் வெளிப்படையாவவே கூறுகின்றார்கள்.

யாழ் நகர்ப் பாடசாலைகளில் சாதி ரீதியான வேறுபாடுகளைக் காணாவிட்டாலும் கூட அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையே இவ் வேறுபாட்டைக் காண முடிகின்றது. இந்நிலையில் எமது சமூகத்தில் சாதிப்பாகுபாடுகள் இல்லையென யாராவது கூற முடியும்?

**(மேற்படி சம்பவம் யாழ்/ இணுவில் மத்திய கல்லூரியிலேயே இடம்பெற்று வருகின்றது.)**

---

**சாதியின் பெயரால் உயர்வு தாழ்வு, மதத்தின் பெயரால் வேற்றுமை உணர்ச்சி, தேசத்தின் பெயரால் குரோதத்தன்மை முதலான இழிகுணங்கள் மனிதனிடமே அதிகமாகக் காண்கிறோம். மற்றும் கடவுளின் பெயரால் மேல் - கீழ் முதலாகிய அயோக்கியத் தன்மைகள் மனிதச் சீவனிடமே உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனிதச் சீவன் உயர்ந்தது என்று சொல்லவேண்டுமானால் மேற்கண்ட கெட்ட, தீய, இழிவான, அயோக்கியத்தனமான குணங்கள் என்பவைகள் எல்லாம் மனிதனிடம் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்ற பகுத்தறிவில்லா சீவராசிகளை விட மனிதச்சீவன் மூளை விசேடம் முதலிய அவயத்தை நன்மைக்காக பிரயோகித்துக்கொண்ட சீவன் என்று சொல்லப்படும். அதில்லா நிலையில் எவ்விதத்திலும் மனிதச்சீவன் மற்ற சீவப்பிராணிகளை விட உயர்ந்ததல்ல என்பதோடு பலவிதத்திலும் தாழ்ந்தது என்றும் சொல்லவேண்டியிருக்கிறது.**

**-பெரியார்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘முதியோர்களை பாதுகாப்பதில் கிராமங்களே முன்னணியில்.’

– திவ்யா –

யாழ்ப்பாணத்திலுள்ள முதியவர்களது நிலை இன்று மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. பிள்ளைகளுக்கு உயிரூட்டி வளர்த்த பெற்றோர்கள், பிள்ளைகள் இருந்தும் அன்பு செலுத்துவதற்கு யாருமற்ற அனாதைகளாக முதியோர் இல்லங்களில் இருந்து வருகிறார்கள். இந்த அவல நிலை உயர் வர்க்க மக்களிடையே கூடுதலாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன?

பெற்றோர்கள் வயோதிபம் அடைந்ததும் அவர்களுக்குச் சிறுதொகை பணத்தையும் கொடுத்து முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகிறார்கள். அது மட்டுமல்லாது தங்களுக்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போலும், தங்களது கடமை முடிந்து விட்டதென்றும் நினைக்கிறார்கள். உண்மையில் பெற்றோர்களை வயோதிப விடுதிகளில் ஒப்படைப்பதோடு பிள்ளைகளது கடமைகளும், பொறுப்புக்களும் நிறைவேறிவிட்டதாக கருதிவிட முடியுமா?

அது மட்டுமன்றி சொந்தப் பிள்ளைகள், மருமக்களால் ஒரு நேர உணவும் கொடுக்காது பட்டினி போட்டு புறக்கணிக்கப்பட்டும், தாக்கப்பட்டும் வருகின்றார்கள் முதியவர்கள். இப்படிப்பட்ட மனிதநேயம் அற்றவர்களில் அதிகமானோர் அரச, தனியார் நிறுவனங்களில் உயர் பதவிகளை வகிப்பவர்களாகவும், பொறியியலாளர் கணக்காளர்களென மிகப்படித்த மேதைகளாக இருப்பதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

உறுவுப்பலம், காசு பொருள் என வசதிகள் இருந்தும் அனாதைகளாகிப் போனவர்கள் இவர்கள். இது ஒரு புறம் இருக்க வெளிநாட்டு மோகத்தால் பிள்ளைகளை அங்கு அனுப்பிவிட்டு இங்கு அனாதரவாகத் துடிக்கும் முதியவர்களின் நிலையும், அவர்கள் படும் துன்பங்களும் விபரிக்க இயலாதவை.

ஒரு பகுதியினர் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இவர்கள் பிள்ளைகளை அனுப்பி விட்டு அவதிப் படுகிறார்கள். சுகவீனம் வந்தால் கூட்டிச் சென்று மருந்து எடுக்கவேண்டிய பிள்ளைகள் தொலைபேசியில் மருந்தெடுத்தீர்களா என்றும் பக்கத்திலிருந்து பார்க்க வேண்டியவர்கள் ஸ்கைப்பின் (Skype) மூலமாக பெற்றோர்களை மருந்து குடிக்கவைத்துப் பராமரிக்கும் நிலமையாக உள்ளது இன்றைய நிலை.

பிள்ளைகளுக்குத் துன்பம் கொடுக்கக் கூடாது என்று எண்ணி தங்களால் முடியுமானவரை எழுபது எண்பது வயதுகளிலும் உழைத்து வாழும் முதியவர்களும் எம்மிடையே வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

இதற்கு மாறாக கடைகள், கோயில்கள், பேரூந்து நிலையங்கள், வீடுகள் எனப் பல இடங்களிலும் பிச்சை எடுப்பவர்கள் கதைகளும் உண்டு. பிள்ளைகளாலும் உறவுகளாலும் கைவிடப்பட்ட இவர்கள் தங்களின் அன்றாடத் தேவைகளை (மது உட்பட) நிறைவு செய்வதற்காக பிச்சை எடுப்பதைத் தங்கள் தொழிலாகவே செய்து வருகின்றார்கள். அவர்கள் இந்தச் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை எழுத்துக்களால் விபரிக்க முடியாது. ஒவ்வொருவரிடமும் ஒரு ரூபாய் வாங்குவதற்கு ஓர் ஆயிரம் திட்டுக்களும் ஏச்சுக்களும் வாங்க வேண்டியிருக்கிறது. முதியோர் இல்லத்தில் சேர இவர்கள் மறுக்கிறார்கள். இவர்களை சேர்க்க முதியோர் இல்லங்களும் மறுக்கின்றன. முதியோர் இல்லங்களில் தலித்துக்களுக்குரிய இடம் குறைவாக இருப்பதும் இங்கு குறிப்படத்தக்கதாகும்.



இவர்களுக்கு மத்தியில் அன்பு பாசத்துடனும், பிள்ளைகள், உறவுகளை அரவணைத்து சிக்கனமாகவும் மனநிறைவுடன் வாழ்ந்து வரும் முதியவர்களையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறானவர்கள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட கிராமங்களில் வாழும் மக்களாகவே காணப்படுகிறார்கள். இந்த முதியவர்களது பிள்ளைகள் கூலி வேலைக்குச் சென்று அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டே ஒரு வேளை உணவை என்றாலும் உண்டு பெற்றோர்களுடன் சந்தோசமாக வாழ்கின்றார்கள். இவர்களில் அனேகமானோர் அடிப்படை வசதிகள் இல்லாதிருந்தும் அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து வருகின்றார்கள்.

பொருள், பண்டம், சொத்து, பணம் போன்றவைகள் இல்லாத இடங்களில்தான் அன்பு, இரக்கம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, பெரியவர்களிற்கு மதிப்பளிக்கும் இயல்புகள் போன்ற நேசமான உறவுகளையும் காணக்கூடியதாக உள்ளது. அது மட்டுமன்றி ஒடுக்கப்பட்ட மக்களுக்கிடையே கூட்டுக் குடும்ப வாழ்க்கை அமைப்பு முறை இன்றும் பேணப்பட்டு வருகின்றது. முதியவர்களின் பாதுகாப்பிற்கு இவர்களது கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையும் ஓர் காரணமாக இருக்கலாம்.

உயர்ந்தவர்கள், படித்தவர்கள் எனப்படுபவர்களிடம் மேற்படியான உறவுமுறைகளை காணமுடிவதில்லை. மனிதநேயம் அற்றவகையில், பணம் பொருள் மட்டுமே வாழ்க்கையின் இலட்சியம் எனக் கருதி முதியவர்களை அலட்சியப்படுத்திவருகின்றனர். பணம் தேடும் பிசாசுகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தாங்களும் இந்த முதுமையை அடைவோம், அப்போது எமது பிள்ளைகளும் இதையே செய்வார்கள் எனச் சிந்திப்பதில்லை.

பெற்ற பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோர்கள் 60 இல் இருந்து 80 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும், தமக்குத் தேவையான பண உதவியை பிள்ளைகளிடமிருந்து பெற்றுத் தரும்படி 150 - 200 முறைப்பாடுகளும், பிள்ளைகளால் தாக்கப்படுவதாக நாளாந்தம் 5 - 10 முறைப்பாடுகளும் தமக்கு கிடைப்பதாக தேசிய முதியோர் நிலையத்தின் பணிப்பாளர் திருமதி ஜே. கிருஸ்ணமூர்த்தி அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித மேதைகளை உருவாக்கும் காரை ஊரில் அமெரிக்க மிசன் தமிழ் கலவன் வித்தியாலயம்

தீவக வலயம் விரைவு கணித போட்டியான வலயமட்டப் போட்டியில் யாழ். காரை ஊரி அ.மி.த.க. வித்தியாலய மாணவர்கள் சாதனை புரிந்துள்ளனர். அதில் 3 மாணவர்கள் முதலாம் இடத்தையும், ஒரு மாணவன் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்கள். இந்த நான்கு மாணவர்களும் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பெயர் விபரம் பின்வருமாறு

தரம் 2 ச.கனிஸ்ரன் முதலாமிடம், தரம் 3 சு.சுகிர்தன் இரண்டாமிடம், தரம் 4 ச.யோன் முதலாமிடம், தரம் 5 சு.விதுர்சன் முதலாமிடம் ஆகும்.

ஆசிரியர்கள் மாணவர்கள் உழைப்பாலே இந்த வெற்றி கிடைத்துள்ளது. கணித மேதைகள் எமது பாடசாலையில் கல்வி கற்கிறார்கள் என்பதையிட்டு நான் மிகவும் பெருமைப் படுகிறேன். அது மட்டுமன்றி இங்கு கல்வி கற்பவர்கள் அனைவரும் சிறுபான்மைத் தமிழர் என்பது குறிப்படத்தக்கது என்கிறார் இப்பாடசாலையின் அதிபர்.

# கைவிடப்படும் நிலையில் இறால் வளர்ப்பு....

வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக காரைநகர் பிரதேச சபையின் வழிகாட்டலில் கைத்தொழில் முயற்சியான இறால் வளர்ப்புக்காக ஊரி கிராம வாழ் மக்களுக்காக ரூபா.8 இலட்சம் வழங்கியிருந்தது.

முதல் முயற்சியில் சென்ற வருடம் ரூபா.6 இலட்சம் இலாபம் கிடைத்த போதும் அடுத்த கட்டம் தோல்வி அடைந்துள்ளது. 2ம் கட்டமாகவும் 70000 இறால் குஞ்சுகள் விடப்பட்டிருந்த போதும் தொட்டிகளில் இருந்த பூச்சி புளுக்கள் காரணமாக அனைத்தும் மறு நாளே இறந்துள்ளன.

மீதமுள்ள பணத்தைக் கொண்டு 3ம் கட்டமாக விடப்பட்ட 60000 குஞ்சுகளும் நீரின் அதி கூடிய உவர்ப்புத் தன்மையால் நடுப்பகுதியில் இறந்துள்ளன. இருந்தும் அதிலிருந்து ரூபா.100000 அவர்களால் பெற முடிந்தது.

இறால் வளர்ப்பின் சூட்சுமங்களை அனுபவ ரீதியாக அறிந்த இவர்கள் காலநிலை தற்போது சரியாக உள்ளதால் மீண்டும் முயற்சிகள் எடுத்துள்ளனர்.

இதற்குத் தேவையான பணம் இல்லாததால் பிரதேச சபையின் உதவியை நாடியுள்ளனர். உதவி வழங்க மறுத்த அவர்கள் அதனை தனியார் முயற்சியாக மேற்கொள்ளுமாறு கூறியுள்ளனர். குறிப்பிட்ட தொகைப் பணம் இல்லாத காரணத்தால் அவர்களாலும் செயற்படுத்த முடியாதுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமான் அவர்களுக்கு..! அன்பான வேண்டுகோள்!



தேவதாசன்.

ஈழத்தமிழர்கள் சார்ந்து உங்களது செயற்பாடுகளை தொடர்ந்து அவதானித்து வருபவன் என்ற வகையில் இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகின்றேன். உங்களிடம் சில சந்தேகங்களை கேட்பதோடு, சில ஆலோசனைகளை வழங்குவதன் நோக்கமாகவே இக்கடிதம் அமைகின்றதென்பதை முதற்கண் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரைப்பட இயக்குனரான நீங்கள் ஈழத் தமிழர்களதும், உலகத்தமிழர்களதும் பற்றாளனாகவும், பாதுகவலனாகவும் உலாவி வருகின்றீர்கள். அதுமட்டுமா! பிரபாகரனின் 'வாரிசாகவும்' தந்தை பெரியாரின் பேரனாகவும் கூட உங்களை அடையாளப்படுத்தி வருகின்றீர்கள். தென்இந்தியத் தமிழர்களையும், குறிப்பாக அங்குள்ள தலித் தமிழர்களையும் அவர்களது துன்பம் துயரங்களை பொருட்படுத்தாது, நீங்கள் ஈழத் தமிழர்களதும்,உலகத் தமிழர்களதும் விடுதலைக்காக போராடுவதை வாழ்நாள் 'பணியாகவும்', 'ஒரு தொழிலாகவும்' செய்து வருவதை கண்டு நான் மெய்சிலிர்த்துப் போனேன். தமிழ்ஈழத்தை அமைப்பதன் ஊடாக உலகத்தமிழரையே விடுவிக்கும் பிரபாகரனின் அபிலாசைகளை நிறைவேற்றிக் காட்டுகின்றேன் பார்! என நீங்கள் உரத்துக் கதறும் ஓசை தேனாக பாய்ந்து உறைகின்றது எனது காதில்.

அனைத்துச் சிங்களவர்களையும் அழித்தொழிப்பதிலும் நீங்கள் மிக ஆவலாக உள்ளதோடு, சர்வதேசம் இராஜபக்சவை தூக்கில்போடவேண்டும் என்பதற்காகவும் போராடிவருகின்றீர்கள். அதே நேரம் 'மரணதண்டனைக்கு' எதிராகவும் நீங்கள் போராடிவருகின்றீர்கள். மனித உரிமை குறித்த உங்களது நிலைப்பாடு மிக அலாதியானது, அற்புதமானது.

அதேவேளையில் இந்திய மத்திய அரசுக் கொள்கையிலும் காங்கிரசை அழிப்பதற்காகவும், ஒழிப்பதற்காகவும் பாடுபட்டு வருகின்றீர்கள். அதேநேரம் முஸ்லிம் மக்களின் படுகொலைகளுக்கு காரணமான குஜராத் முதல்வர் மோடியை போற்றுகிறீர்கள் பாராட்டுகிறீர்கள். அப்படியானால் காங்கிரசைவிட பாரதீய ஜனதாக்கட்சி புனிதமானதா? தலித் மக்களுக்கு அபயமளிக்குமா? பெரியாரின் பேரன் என்கிறீர்களே இது நியாயமா? மத்தியில் அமையும் அரசுகளால் தமிழர்களுக்கு விடிவுவராது என்கிறீர்கள்! அப்படியாயின் உங்கள் தலைமையில் தனித் தமிழ் நாடு கேட்டுப் போராடலாம் தானே? இன்று ஜெயலலிதா அம்மையாருக்கு விழா எடுத்துவரும் நீங்கள் தனித் தமிழ்நாட்டை முன்மொழிந்தால் ஜெயலலிதா அம்மையார் அதற்கு வழிமொழிவார்தானே! என்ன தயக்கம்!

சீமான் அண்ணா நீங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ்ஈழம் பெற்றுக் கொடுப்பதிலேயே ஊன் உறக்கம் இன்றி பாடுபட்டு உழைத்து வருகின்றீர்கள். தமிழ் நாட்டுத் தமிழர்களில் ஒருபகுதியான தலித்மக்களுக்கு நிகழும் கொடுமைகள் ஏன் உங்கள் காதுக்கெட்டவில்லை? திருநெல்வேலியில் உள்ளூராட்சி தலைவர் கிருஸ்ணவேணி ஒரு தலித் என்பதாலும், பெண் என்பதாலுமே உயர் சாதியினரால் மிக மோசமானமுறையில் வெட்டப்பட்டார். தற்போது பரமக்குடியில் ஆறு தலித்துக்கள் மிககொடூரமான வகையில் கொல்லப் பட்டுள்ளனர். தலித்துக்கள் தமிழ்ஈழத்திற்காக கொல்லப்பட்டால் (தீக்குளிப்பு) அதை வைத்து நீங்கள் தமிழ்ஈழ வியாபாரம் நடத்துகின்றீர்கள். தலித்துக்கள் தமது உரிமைக்காக போராடும்போது கொல்லப்பட்டால் அச்செய்திகள் உங்கள் காதுகளுக்கு எட்டுவதில்லையே ஏன்? உங்களுக்கு இருப்பது தமிழ்ஈழப்பற்றா உயர்சாதி அபிமானமா? தேவர் சாதியினரால் தலித் மக்கள் தொடர்ச்சியாக ஒடுக்குதலுக்குள்ளாகி வரும்போதுதானே சீமான் அண்ணா நீங்கள் முத்துராமலிங்கத் தேவரின் சிலைக்கு மாலையிட்டு மரியாதைசெய்து வருகின்றீர்கள்.

முதலில உங்கட 'நாம் தமிழர் கட்சியின்' கொள்கை, கோட்பாடுகளை வெளியிடுங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்க எங்க பெரியார் இருக்கிறார் என்பதை நான் கொஞ்சம் பார்க்க வேணும்.

சீமான் அண்ணா நீங்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவராகவும், தமிழ்நாடடிலே வாழ்ந்துகொண்டும் எமது இனம், எமது போராட்டம், எமது மக்கள் என்றெல்லாம் ஈழத் தமிழர்கள் குறித்தே பேசிவருகின்றீர்கள். உங்கள் பேச்சில் வெறும் உணர்ச்சி மட்டுமே வெளிப்படுகின்றது. இது மிகவும் ஆபத்தானது. 1970 களில் இலங்கையில் ஈழத் தமிழர் தலைமைகள் பேசிய பேச்சுக்களும் உணர்ச்சியூட்டல்களிலும் முளைத்தவர்தான் பிரபாகரன். அவரது வழிகாட்டலின் விளைவு பல லட்சமக்களின் அழிவிற்கும் காரணமானது.ஒரு திரைப்படத்தின் சாதனையில் கூட்டம் சேர்ப்பதைவிட உணர்ச்சியூட்டி கூட்டம் சேர்ப்பது இலகுவானதென்பதை எமது மக்களின் அழிவுகளிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டீர்கள்.

சீமான் அண்ணா தமிழ் நாட்டிலும் தமிழர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் பல்வேறு விடுதலை தேவையாகவும், அவசியமாகவும் உள்ளதே அது ஏன் உங்கள் கண்ணுக்கும், மனதிற்கும், உணர்விற்கும் எட்டுதில்லை. நான் அண்மையில் தமிழ் நாடு சென்று வந்ததால் அங்கு தமிழ்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் துயரங்களும் துன்பங்களும் வீதிதோறும் பரவிக்கிடப்பதை காணக் கூடியதாக இருந்தது. தமிழ் நாட்டில் பல்லாயிரம பிரச்சனைகள் குவிந்து கிடக்கின்றது.அதை முதலில் கவனியுங்கள் அவற்றை தீர்க்க முயற்சி செய்யுங்கள் சென்னையை சுற்றி வந்தால் ஒவ்வொரு மனிதனின் வியர்வையிலிருந்து கசிவது கூவம் நதியின் நாற்றமாக இருக்கின்றது. தமழ்ஈழக்கொடி உயர்த்திக் கோசம் போடும் உங்கள் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மூலமாக ஒரு வாரத்தில் கூவம் நதியை சுத்தம் செய்து விடலாம். அப்படிச்செய்தீர்களானால் சிலைகளைத்தேடி நீங்கள் மாலை போடத் தேவையில்லை. உங்களுக்கே தமிழ் நாட்டு மக்கள் சிலை வைப்பார்கள். காலம் பூராவும் உங்கள் பெயர் நிலைக்குமல்லவா? சென்னையில் ஒவ்வொரு தெருவையும் கடக்கும்போது ஒவ்வொரு இராணுவ முகாம்களை கடப்பது போன்ற உணர்வே எனக்கிருந்தது. வீடு வசதியற்ற தமிழ்நாட்டுத் தமிழ் மக்கள் வீதியிலும், தெருவோரங்களிலும் குடும்பம் நடத்துகின்றார்கள். இவ்வாறு தமிழ் நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் துன்பங்கள் குவிந்து கிடக்கின்றது. தமிழ் பேசும் தலித் மக்களுக்கான அரசியல் உரிமைகள் பெறவேண்டிய தேவைகளும் மிக அவசியமாக படவில்லையா பெரியாரின் பேரனான உங்களுக்கு? உங்கள் இளைஞர் படைகளைக் கொண்டு இவைகளை நிவர்த்திசெய்ய முயற்சியுங்கள்.

இலங்கை மக்கள் இரத்தம் சிந்தி சிதைந்து, அழிந்தது போதும். அவர்கள் அமைதியாக வாழ விரும்புகின்றார்கள். அவர்களின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் தயவசெய்து நடந்து கொள்ளாதீர்கள்.

இலங்கையில் தமிழ் ஈழம் கேட்டவர்களே இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் அதிகமாக வாழ்ந்து வருகின்றார்கள். அதில் கணிசமானவர்கள் புலிகளின் பொருளாதார பினாமிகள். அவர்களுக்குத்தான் இலங்கையில் தொடர்ந்து அமைதியின்மையும் யுத்தமும் தேவைப்படுகின்றது. அவர்களின் ஊதுகுழல்தான் நீங்கள் என்பது நான் உட்பட எல்லோரும் அறிந்த உண்மை. ஊதுகுழலான உங்களுக்கு யுத்தத்தில் சிக்குண்ட ஏழை,எளிய மக்களின் துயரம் புரியாது.

நீங்கள் உண்மையான மனித இனப்பற்றுள்ளவர் என்றால் உங்கள் நாட்டுக்குள்ளேயே விடுதலை தேவைப்படும் மக்களுக்காக குரல் கொடுங்கள். காஸ்மீர் மக்களுக்காக போராடுங்கள். தெலுங்கான மக்களுக்காக போராடுங்கள், ஆண்டாண்டு காலமாக ஒடுக்குமுறைக்குள்ளாகி வரும் தலித் மக்களுக்காக போராடுங்கள் இந்திய விரிவாக்க கொள்கைக்கு எதிராக போராடுங்கள். இமையம் தொட்டு ஈழம் வரை இந்து நாடு அமைப்போம் என கோசமிடும் பாரதிய ஜனதாக் கட்சிக்கு எதிராக போராடுங்கள்.

தயவு செய்து இனவாதம் பேசுவதை நிறுத்துங்கள். இனவாதம் பேசிப்பேசி அப்பாவிகளை தீக்குளிக்கவைச்சு அதில் நீங்கள் தொடர்ந்து குளிர்காய வேண்டாம், உங்களுடைய தொடர்ச்சியான இனவாதக கருத்தியலால் தமிழ்நாட்டிலும் ஒரு 'சிவசேனையை' உருவாக்கும் சூழலை ஏற்படுத்திவிடாதீகள் எனவும் மிக அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு

உங்கள் உண்மையான மனித நேயத்தை மிக ஆவலுடன் எதிர்பார்க்கும்!

தேவதாசன் ✎

# சாந்திக்கு இழைக்கப்பட்ட அநீதி

**புன்னாலைக்கட்டுவன் தெற்குப்பகுதியில் 150 பரப்பளவுள்ள காணி ஒன்று தனிநபர் ஒருவருக்கு சொந்தமாக இருந்தது. இதிலடங்கியுள்ள 50 பரப்புக் காணியில் 15 குடும்பங்கள் 100 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வந்துள்ளனர்.**

**வன்னி யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து வன்னியில் இருந்து யாழ் வந்த ஒருவருக்கு 100 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வந்த அந்த மக்களின் 50 பரப்பு காணி விற்கப்பட்டுள்ளது. இருப்பினும் இக்காணி எழுத்து மூலமாக இதுவரை மாற்றப்படவில்லை.**

**குடியிருந்த குடும்பங்களில் சிலருக்கு ஒரு சிறு தொகைப் பணம் திணிக்கப்பட்டு அவர்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றியும் உள்ளனர். மேலும் எட்டுக் குடும்பங்கள் எதுவித போக்குவரத்து வசதியுமற்ற பகுதியில் மீழ்குடியேற்றப்பட்டுள்ளனர். இதில் மூன்று பிள்ளைகளின் விதவைத் தாயான சாந்தி அவர்களும் பரம்பரையாக ஏறத்தாழ 100 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வந்துள்ளார். குறித்த காணியில் வாழ்ந்ததற்கான சான்றுகள் இருந்த போதும் சாந்தியிடம் அவருடைய பெயரிலான காணிப் படிவம் எதுவும் இல்லாதிருந்தது.**

**இருந்தபோதும் சாந்தி என்பவர் மட்டும் சகலவிதமான எதிர்ப்புகளையும் எதிர்கொண்டு தனது காணியில் இருந்து வெளியேற மறுத்து வந்துள்ளார்.**

**சாந்தியை வெளியேற்றுவதில் தோல்விகண்ட காணியின் திடீர் உரிமையாளர் உடுவில் இணக்க சபையூடாக நீதி கேட்டு அடம்பிடித்தார். முதலில் சாந்தி உடனடியாக வெளியேற வேண்டும் என இணக்கசபை தீர்ப்பு வழங்கியது. இருந்தும் சாந்தியின் தொடர்ச்சியான போராட்டத்தினால் இணக்கசபை சாந்திக்கு ஒரு பரப்புக்காணி வழங்க இணங்கியது. இருந்தபோதும் எழுத்து மூலமான பத்திரம் எதுவும் சாந்திக்கு இதுவரை வழங்கப்படவில்லை.**

**பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து மீண்ட சாந்திக்கு சமுர்த்தித் திட்டத்தின் கீழ் மலசலகூடம் கட்டுவதற்கான உதவி கிடைத்தது. அவரும் அதற்கான உதவியைப்பெற்று கிடங்கு வெட்டுவதற்கான பணியையும் மேற்கொண்டார். வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென வேலையைக் கைவிடுமாறு சமுர்த்திச் சங்கம் அறிவித்துள்ளது. இது காணியின் திடீர் உரிமையாளரின் பழிவாங்கும் செயலாகத்தான் இருக்கும் என நம்புகிறார் சாந்தி. கிராம அலுவலரும், சமுர்த்தி உஸ்தியோகஸ்தர்களும் மூன்று பிள்ளைகளின் விதவைத் தாயான சாந்தியின் நிலையை கருணையுடன் அணுகவேண்டும்.** ✎




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் யோகரெட்ணம் அவர்களின் "தீண்டாமைக் கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும்" நூல் வெளியீடும், விமர்சனக் கூட்டங்களும்......






தீண்டாமைக் கொடுமைகளும் தீமூண்ட நாட்களும் நூல்வெளியீட்டு நிகழ்வு பிரான்ச் யாழ்ப்பாணம், கொழும்பு, போன்ற இடங்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. எதிர்வரும் 29-10-2011இல் லண்டனிலும் நடைபெற உள்ளது.இது குறித்த மேலதிக விபரங்கள் Thuuu.net இணையத்தில் பார்வையிடலாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1957இல் இருந்து உறங்கிக்கிடந்த ‘நீறு’ பரமக்குடியில் நெருப்பானது .



10.09.1957 இல் முதுகுளத்தூர் சாதிக்கலவரத்தை சமாதானப்படுத்துவதற்காக அப்போதைய காமராஜரின் அரசு சமாதான உடன்படிக்கை ஒன்றை தயாரித்து அதில் இரு சாதியின் தலைவர்களும் கையெழுத்து இடுமாறு கேட்டுக்கொண்டது. அந்த சமாதான கூட்டத்தில் தேவர் குலத்து தலைவரான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் உட்கார மறுத்துவிட்டார். காரணம் தலித்துக்களின் தலைவரான இமானுவேல் சேகரன் அமர்ந்திருக்கும் இடத்தில் எப்படி நான் அமரமுடியும் எனும் சாதித் திமிரே தேவரை இமானுவேல் சேகரனுக்கு நிகராக அமரமறுத்ததாகும். இமானுவேல் சேகரன் அவர்கள் சமாதான உடன்படிக்கையில் கையொப்பம் இட்டபோதும். முத்துராமலிங்கத்தேவர் கையொப்பம் இட மறுத்துவிட்டார்.

இம்மானுவேலை, தமக்கு இணையான தலைவராகவோ, தலித்களின் தலைவராகவோ தம்மால் ஏற்க முடியாது என முத்துராமலிங்கத் தேவர் கூறினார்.

“என் அளவு நீ பெரிய ஆளாக, பெரிய தலைவனாக ஆகி விட்டாயா? உன்னோடு சேர்ந்து நானும் இந்தக் கடிதத்தில் கையெழுத்திட வேண்டுமா?” எனச் சொல்லி, தேவர் கையெழுத்திட மறுத்து வெளியேறினார். எனக்கு நேர்ந்த இந்த பகிரங்க அவமானம் குறித்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? என்றும் முத்துராமலிங்கத் தேவர் மாநாட்டிலிருந்து வெளியே வந்து தனது சீடர்களைக் பார்த்துக்கேட்டார். அதற்கு அடுத்த தினமே, முத்துராமலிங்கத் தேவரின் சீடர்கள் அடங்கிய ஒரு கும்பல் இமானுவேலை மறைந்திருந்து தாக்கிக் கொலை செய்தது. “முத்துராமலிங்கத் தேவருக்குச் சவால் விடுமளவிற்கு எங்கேயிருந்தடா உனக்கு தைரியம் வந்தது” எனக்கேட்டவாறே இமானுவேல் சேகரனை வெட்டிக் கொலை செய்தார்கள்.

இதன்காரணமாக முத்துராமலிங்கத் தேவர் கைதுசெய்யப்பட்டபோதும் தண்டனை ஏதுமின்றி விடுதலை செய்யப்பட்டார். இந்தச் சாதிவெறியனான முத்துராமலிங்கத்தேவர் காமராஜ் அவர்களையும் தொடர்ந்து அவமானப்படுத்தி வந்தவர்.காமராஜர் படிக்காதவர், கைநாட்டு, குறைந்த சாதி என்றெல்லாம் ஏளனம் செய்து தனது சாதித் திமிரை வெளிப்படுத்தியவர்தான் இந்த முத்துராமலிங்கத் தேவர். முத்துராமலிங்கத்தேவர் இறந்த பிற்பாடு தேவர் சாதியினர் மதுரை கோரிப்பாளையத்தில் அவருக்கு ஒரு சிலை வைத்துள்ளனர். தொடர்ச்சியாக அவரது நினைவு நாளில் அவரது சிலைக்கு மாலையிட்டு பூசைகள் செய்து அதை ஒரு பெரும்விழாவாக கொண்டாடியும் வருகின்றனர்.



இதை தொடர்ச்சியாக கண்டுவந்த தலித் சமூகத்தவர்கள் முத்துராமலிங்கத் தேவருக்காக மேற்கொள்ளப்படும் விழாவிற்கு நிகராக தாமும் தமது தலைவரான இமானுவேல் சேகரனை கௌரவிக்குமுகமாக அவரது நினைவு நாளை கொண்டாடி வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 ஆம் பக்க தொடர்ச்சி...

அவ்வாறே கடந்த 11.09.2011 அன்று தலித் தலைவரான தியாகி இமானுவேல் சேகரனின் 54வது நினைவு நாளை முன்னிட்டு பரமக்குடியில் உள்ள அவரது நினைவிடத்திற்கு வருகை தந்த மக்கள் மீது காவல் துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 1. பல்லவராயனேந்தல் கணேசன் 2.வீரம்பல் பன்னீர் 3. மஞ்சூர் ஜெயபால், 4. சடையனரி முத்துக்குமார் 5. கீழகொடுமலூர் தீர்ப்புக்கனி 6. காக்கனேந்தல் வெள்ளைச்சாமி ஆகியோர்கள் கொல்லப்பட்டனர். இளையான்குடி துப்பாக்கிச் சூட்டில் ஆனந்த் என்ற மாணவன் குண்டடிபட்டான். மதுரையிலும் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 1.ஜெயப் பிரகர், 2.பாலசுப்பிரமணியன் ஆகியோர் படுகாயமுற்றனர். காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். 30க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பரமக்குடியில் நிகழ்ந்த சாதிக் கலவரத்தில் கொல்லப்பட்டவர்களுக்கான நீதி, நியாயங்களை நேர்மையான வகையில் மேற்கொள்வதை தற்போதைய ஜெயலலிதாவின் அரசு தவிர்த்து வருகின்றது. அதுமட்டுமல்லாது தேவர்சாதியினருக்கு சாதகமான வகையிலும், தலித்துக்களுக்கு விரோதமான வகையிலுமே செயல்பட்டு வருகின்றது.

நடந்த சம்பவம் குறித்து களஆய்வு மேற்கொண்ட பல்வேறு உண்மை அறியும் அமைப்புகள் கலவரம் குறித்த உண்மை நிலையை பகிரங்கப்படுத்தி வருகின்றனர். இக்கலவரமானது திட்டமிட்ட வகையில் தேவர்சாதியினரால் மேற்கொள்ளப் பட்டதென்பதை ஆதரபூர்வமாகவும் அம்பலப்படுத்தி வருகின்றனர்.

# பொது மண்டபத்துக்கு மின்னிணைப்புப் பெறுவதில் சிரமம்

காரைநகர் ஊரிக் கிராமத்திலுள்ள பொது மண்டபத்துக்கு மின்னிணைப்புப் பெறுவதில் இடர்பாடுகள் காணப்பட்டு வருகின்றன.

கட்டடத்தின் மின்னிணைப்புக்குத் தேவையான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டும் மின்னிணைப்பைப் பெற முடியவில்லை. தற்போது இயங்கி வரும் கிராம அபிவிருத்திச் சபையால் சித்தங்கேணி மின்சார சபைக்கு மின்னிணைப்பு வழங்குமாறு விண்ணப்பித்துள்ள போதும் நிர்வாகம் மாற்றமடையும் போது அவர்கள் உரிய முறையில் பணத்தைச் செலுத்த மாட்டார்கள் என்பதைக் காரணம் காட்டி முற்பணம் செலுத்துமாறு பணித்துள்ளார்கள். நடைமுறைக்கு புறம்பான வேண்டுகோளால் இதுவரை பொது மண்டபத்துக்கு மின்சாரம் கிடைக்கவில்லை.

மின்சார சபையின் ஒழுங்கற்ற தன்மையால் வேள்ட் விசனால் கடல்தொழில் சங்கத்திற்கு வழங்கப்பட்ட குளிர்சாதனப் பெட்டி இயக்க முடியாத நிலை, மாணவர்களின் இரவு நேரக் கல்வி, கலை நிகழ்வுகள் என்பவற்றை நடாத்த முடியாத நிலை காணப்படுகிறது.

மின்சாரசபை இதனைக் கவனத்தில் கொண்டு செயற்படுமாயின் முடக்கப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சிகளிலும் மாற்றம் காண முடியும் என கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.சபாரத்தினம் தெரிவித்துள்ளார்.

இக்கிராமத்தின் 1500 மீற்றர் நீளமான பழனிமுருகன் அண்ணமார் கோயில் வீதிக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இப்பகுதிக்குள் 150 குடும்பங்களும் 300ற்கும் மேற்பட்ட மாணவர்களும் 2கோயில்களும் உண்டு. மக்கள் தங்கள் வீடுகளுக்கு மின்சாரம் பெறத் தயாராக இருந்த போதும் குறிப்பிட்ட வீதிக்கு மின்னிணைப்பு வழங்கப்படாததால் அவர்கள் வாழ்வும் இருளில் நகர்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**உண்மையான சமூக சீர்திருத்தத்தை இன்று எந்த அரசியல்வாதியும், பொருளியில்வாதியும் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். நம்நாடு மாத்திரம் அல்லாமல் இன்று உலகில் எங்கே பார்த்தாலும் அதிகார வெறியும் பணவெறியும் கொண்ட மக்களால் அவர்களது நன்மைகேற்ற அரசியல் சீர்திருத்த கிளர்ச்சிதான் நடந்துவருகிறது.**

**-பெரியார்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தன் கதைக்கிறேன்



நம்மட நாட்டுல சாதி என்டுற சாக்கட நீண்டகாலமா ஓடிக்கொண்டிருக்குது. இத அழிக்கவேண்டியதும், அகற்றவேண்டியதும் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள கடமையாகும். அதுக்கான வேலைத்திட்டங்கள எங்கட டானியல், எம்.சி.சுப்பிரமணியம் போன்ற பழைய தலைவர்கள் பல தியாகங்களைச் செய்து ஒடுக்கப்பட்ட மக்களின்ர விடுதலைக்காகவும், மேம்பாட்டுக்காகவும், பல போராட்டங்களையும், முன்னெடுப்புகளையும் மேற்கொண்டவை. அதாலதான் சாதியரீதியா ஒடுக்கப்பட்ட மக்கள் இந்தளவுக்காவது முற்னேற்றம் அடைஞ்சவை. 1980 வரையும் சிறுபான்மை தமிழர் மகாசபையும் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கமும் இரட்டக்குழல் துப்பாக்கிமாதிரி தொடர்ச்சியாக நடத்தின விடுதலைப்போராட்டம் 1980 இற்குப்பிறகு சில இயக்கங்கள் நீங்கள் போராட வேண்டாம் நாங்கள் தமிழீழம் எடுத்த உடன டக்கெண்டு இந்தப்பிரச்சனைய தீர்த்துப்போடலாம் என்று எங்கட அமைப்புகளப் பூட்டிப்போட்டினம்.

இப்ப பார்த்தால் தமிழீழம் எடுத்தபாடும் இல்ல சாதி அழிந்தபாடும் இல்ல. தமிழ் மக்களின்ர விடுதலையை எடுக்கிறதுக்கு கனக்க தலைவர்கள் இருக்கினம். எல்லா கோயில்களுக்கும் சங்கம் இருக்கு. ஊருக்கு ஊர் ஏகப்பட்ட சங்கங்கள் இருக்கு. இந்த எல்லா சங்கங்களும் சாதியக் காப்பாற்றத்தான் வைச்சிருக்கினம். ஆனா காலம் காலமா சாதியால பிழவு பட்டுக்கிடக்கிற சனங்களுக்கு, சாதிய அழிக்கிறதுக்கு ஒரு சங்கம் கிடையாது. இதாலதான் நாம் விட்ட இடத்தில இருந்து துவங்கவேண்டிக்கிடக்கு. இதனால சிறுபான்மைத் தமிழர் மகாசபை மீண்டும் தன்ன இயக்கவேண்டிய கட்டாயக் கடமையில் இருக்குது. சிறுபான்மை தமிழர் மகாசபைக்கு ஒரு வரலாறு இருக்கு. 1927 ஆம் ஆண்டில இருந்து சமூகவிடுதலைக்காக புறப்பட்ட பல இயக்கங்களின் தொகுப்புத்தான் சிறுபான்மைத் தமிழர் மகாசபை. இச்சபை சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மிகவும் அறிமுகமான இயக்கம், பல சமூகவிடுதலைப் போராளிகளிகளை உருவாக்கிய இயக்கம், ஒடுக்கப்பட்ட மக்களின் வெற்றிகளை வென்றெடுத்த இயக்கம். ஆகவே இண்டைக்கு இப்படியான சமூகவிடுதலை இயக்கங்கள் இல்லாமலுக்கு சாதி அழிவு சாத்தியமில்லை. சமூகவிடுதலை சாத்தியம் இல்லாவிட்டால் தேசியவிடுதலையும் சாத்தியமில்லை. புதிய தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்கள் சாதிய மறைப்பு போராட்டத்தை விட்டுவிட்டு சாதிய ஒழிப்பு போராட்டத்தில் தங்களது பங்களிப்பை செலுத்த முன்வரவேண்டும். சாதியும் சீதனமும் பெண்ஒடுக்கு முறையும் பிரதேசவாதமும் மதபாகுபாட்டையும் வச்சுக்கொண்டு ஒரு சமூகம் தங்கள ஒரு அறிவுடைய சமூகம் எண்டு பெருமகொள்ள ஏலாது. இப்பிரச்சனைகள் தொடர்வதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்க வேண்டும். அதற்கான கேள்விகள முன்வைக்க வேணும், அதற்காக பேச வேணும். கண்ணமூடிக்கொண்டிருந்தால், நமக்கு என்னத்திற்கு வீண்பிரச்சனை எண்டிருந்தா சாதிப்பிரச்சனைகளை எப்பிடி தீர்க்கிறது. கல்வியிலும், பொருளாதாரத்திலும் மேம்படும் அதேநேரம் நம்மட கலாச்சாரத்தையும் கேள்விக்குள்ளாக்க வேணும். இந்த கல்வி கலாச்சார விசயங்கள பற்றி அடுத்த பத்திரிகையில் விரிவா கதைப்பம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலாட்டம்

எப்போதும்
கொலை பற்றிய சிந்தனையாகவே இருக்கிறது.
கொலையின் மீதான நாட்டம் நாளுக்கு
நாள்
வளர்ந்து கொண்டிருக்கிறது
நண்பர்கள் தகிக்கும் புன்னகையை
பருகிக்கொண்டேயிருக்கிறார்கள்
கொலை செய்வது எதில் போய் முடியுமென ரகசியமாய்
ஒருவனைக் கேட்டேன்
பிணத்தில்தான் நண்பனே

முத்தங்கள் பற்றிய பயம் தடீரென வந்துவிட்டது
என்னால் கொலை செய்யப்படுபவன் எதிரியாய்,
நண்பனாய், ஏதேனும் ஓர் உறவாய் இருக்க
வேண்டுமென்பது
அவசியமில்லாத ஒன்று
கொலை செய்வதற்கான முன் காரணமும் ஏதுமில்லை
வெறுமனே
ஒரு கொலை
அவ்வளவுதான்
என்னை நான் கொலையாளி என
அழைத்துக்கொள்வேன்

கொலையாளி

சம்பந்தப்பட்ட நபரை,அல்லது
புறாவை கொலை செய்து என்னை அனுபவித்தார்
அதைஎப்படி புரிந்துகொண்டு நிதானமாய் செய்தார்
என்பதை நானே நான் வழக்கமாகப்
படிக்கும்
பத்திரிகைகளுக்கு,

பரிசுப் போட்டிக் கதைகளுக்கு இணையான
கவர்ச்சியோடு
எழுதுவேன்

சிறைபற்றிய எந்தக் கனவும் வர மறுக்கிறது
அதற்கு முன்னர் நான் கொலை செய்யவேண்டும்
வராத கனவு நிஜத்தில் துருப்பிடிக்கும் மணத்துடன்
துவங்கும்
கொலை ஆயுதத்தை தேர்ந்தெடுப்பதில்
எந்தக்குழப்பமும்

இல்லை

நான் இருக்கிறேன்

இறுதியில் வாசகனாகவும்,
படைப்பாளனாகவும் இருக்கும்
துரதிருக்ஷ்டம் எனக்கு வாய்க்கும்
நான் கொலையாளியான

என்னைக் கொலை செய்தபின்
கொலைக் குறிப்புகளை எழுதுவது பற்றிய குழப்பத்தில்
கொலையையும்–தற்கொலையையும்
சற்று தள்ளி வைத்துள்ளேன்
வாசகர்கள்
என் பிணத்தின் முன் அறிக்கை போலொன்றை
இப்பொழுது நிதானமாய் வாசிக்கிறீர்கள்

ஆமென்.

- வசுமித்ர-ஆதிரன் ஆகியோரின் -
'கள்ளக்காதல் தொகுப்பிலிருந்து'

வசுமித்ர-ஆதிரன்
'கள்ளக்காதல்' சொற்கள்
உடல்-உள் புகுந்து
எனது எலும்புகளை
உரசி
சில
துவாரங்களை இடுகின்றது
ஒரு புல்லாங்குழல்
செய்வதற்காக
-அசுரா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org